**கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைந்த சுதேச மருத்துவ விஞ்ஞான பட்டபின்படிப்பு நிறுவகம் 2019**

---

## 1.1 அபிப்பிராயம்

கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைந்த சுதேச மருத்துவ விஞ்ஞான பட்டபின்படிப்பு நிறுவகத்தின் 2019 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதன மாற்றக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புகள், பொழிப்புடனான முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய 2019 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுக்கமைய, எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

நிறுவகத்தின் 2019 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் உண்மையாகவும் நியாயமாகவும் காட்டும் விதத்தில் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களினது கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்பு எனும் பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தினதும் அதனோடு தொடர்புடைய தரப்பினரதும் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கையில் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் ஆற்றலினை மதிப்பீடு செய்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். நிறுவகத்தை கணக்கொழிப்பதற்கு முகாமைத்துவம் கருதுமாயின் அல்லது மாற்றீடு இல்லாதவிடத்து செயற்பாடுகளை இடை நிறுத்த நடவடிக்கை எடுத்தாலேயொழிய, தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கருவின் அடிப்படையில் கணக்குகளை பேணுதல் மற்றும் நிறுவகம் தொடர்ந்தியங்குவதற்குரிய விடயங்களை வெளிப்படுத்தல் என்பன முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிறுவகத்தின் நிதி அறிக்கையிடல் நடைமுறை தொடர்பான பொறுப்பு குறிப்பிட்ட தரப்பினரதாகும்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம், வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை

தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் தொடர்பாக ஏடுகளும் அறிக்கைகளும் பேணப்படுதல் அவசியமாகும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை

------------------------------------------------------

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலை வழங்குதல் மற்றும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்கிய அறிக்கையை வழங்குவது என்பது எனது நோக்கமாகும். நியாயமான சான்றுறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான சான்றுறுதிப்படுத்தலாக இருப்பினும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும்போது அது எப்போதும் போதியளவு தவறான கூற்றுக்களை வெளிப்படுத்துவதற்கான உறுதிப்படுத்தல் அல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் ஏற்படக்கூடும். இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோர் மேற்கொள்ளும் பொருளாதாரத் தீர்மானங்களுக்கு தாக்கம் ஏற்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

என்னால் துறைசார் நீதி மற்றும் தொழில் துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும்போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளை இனங்காணாமையால் ஏற்படும் தாக்கம் பிரபலமானதாகும். தவறான கூட்டிணைவு,போலி ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டைப் புறக்கணித்தல் என்பன மோசடி ஏற்படக் காரணமாகலாம்.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு நிறுவனத்தின் உள்ளக கட்டுப்பாட்டை அறிந்திருந்தபோதும் உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வத் தன்மைக்கான அபிப்பிராயத்தை வெளிப்படுத்துவதற்குக் கருதவில்லை.

- முகாமைத்துவம் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் உசிதமான தன்மையையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையையும் மதிப்பாய்வு செய்தல்.

- சம்பவங்கள் அல்லது நிலைமை காரணமாக நிறுவகம் தொடர்ந்தியங்குவது தொடர்பாக போதியளவு நிச்சயமற்ற தன்மை உள்ளதா என்பது தொடர்பாக பெறப்பட்ட கணக்காய்வுச் சான்றினடிப்படையில் கணக்கீடு சம்பந்தமான நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் தன்மை தொடர்பான அடிப்படையைப் பயன்படுத்தலாம் எனத் தீர்மானிக்கப்பட்டது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் எண்ணுவதாயின் நிதிக்கூற்றுக்களிலுள்ள அத்தகைய வெளிப்படுத்தல்களுடன் எனது கணக்காய்வு அறிக்கையில் கவனம் செலுத்த வேண்டும். அந்த வெளிப்படுத்தல் போதுமானதாக இல்லாதிருப்பின் எனது அபிப்பிராயம் மாற்றத்திற்குள்ளாக வேண்டும். எனது முடிவானது கணக்காய்வு அறிக்கைத் தினம் வரையான கணக்காய்வுச் சான்றுகளின் அடிப்படையிலானவை. எவ்வாறாயினும், எதிர்கால சம்பவங்கள், அல்லது நிலைமை காரணமாக தொடர்ந்தியங்கும் தன்மை முடிவுக்கு வரலாம்.

- வெளிப்படுத்தல்களை உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் உசிதமானவாறும் நியாயமானவாறும் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

இயலுமானவரை மற்றும் தேவையான எச் சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு நோக்கெல்லையும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்குமிடத்து, நிறுவகத்தின் பணிகளை தொடர்ச்சியாக மதிப்பாய்வு செய்யக்கூடியவாறு அதன் ஒழுங்கமைப்பு,முறைமை, நடைமுறைகள்,ஏடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமை, நடைமுறைகள்,ஏடுகள்,அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகப் பேணப்பட்டுள்ளனவா என்றும்,

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டம் அல்லது நிறுவகத்தின் பணிப்பாளர் சபையால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாட்டிற்கு இணங்க நிறுவகம் செயற்பட்டுள்ளதா என்றும்,

- நிறுவகமானது தனது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்துள்ளதா என்றும்,

- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனுடனும் ஆக்கபூர்வமாகவும் கால வரம்பிற்குள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா என்றும்,

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

கொடுக்கல் வாங்கல் முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் குறிப்பிடப்பட்ட அதிகாரத்துடன் நடைமுறைப்படுத்தல், தொடர்புடைய அறிக்கையிடல் நியமங்களுக்கிணங்க நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு தேவையானவாறு கொடுக்கல் வாங்கல்களைப் பதிவு செய்தல் மற்றும் சொத்துக்களுக்கான கணக்கீட்டு நடவடிக்கைகளைப் பேணுதல், முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் குறிப்பான அதிகாரத்துடன் மாத்திரம் சொத்துக்களில் பிரவேசித்தல், பதிவு செய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணக்களித்தகைமையை தற்போதுள்ள சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியினுள் கணக்கிணக்கம் செய்தல் மற்றும் வேறுபாடுகள் இருப்பின் அவை தொடர்பாக உரிய நடவடிக்கை எடுத்தல் தொடர்பான நியாயமான உறுதிப்பாட்டை பெறுவதற்குப் போதிய‘‘சிறந்த முறையில் திட்டமிடப்பட்ட’’ உள்ளகக் கணக்கீட்டுக் கட்டுப்பாட்டு முறைமையை நிறுவனம் பேணுதல் அவசியமாகும்.

**1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்க | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந் |
|---|---|---|---|
| 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பந்தி | மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களுடன் ஆண்டறிக்கையின் வரைவு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | 2019 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை தயாரிக்கப்பட்டவாறுள்ளது. எதிர்காலத்தில் சமர்ப்பிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 756 ஆம் இலக்க நிதிப் பிரமாணம் | நிதிக்கூற்றுக்களின்படி ரூபா 6,334,208 கிரயமுடைய சொத்துக்கள் தொடர்பாக 2019 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு பொருட் கணிப்பு மேற்கொள்ளப்படவில்லை. | ஏற்றுக்கொள்கிறோம். எதிர்காலத்தில் நடாத்தப்படும். சுதேச மருத்துவ விஞ்ஞான பட்டபின்படிப்பு நிறுவகத்தின் நிர்வாக மற்றும் நிதி நடவடிக்கைகள் 2019 மார்ச் மாதம் ஆரம்பிக்கப்பட்டது. | நிதிப்பிரமாணத்தின்படி நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**1.7 நிதி முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின்போது உயர் கல்வி அமைச்சிடமிருந்தும் திறைசேரியிடமிருந்தும் பெறப்பட்ட மூலதன நிதியேற்பாடு ரூபா 10,000,000 ஆகும். இது முகாமைத்துவ நிர்மாணக் கணக்கில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. | உயர்கல்வி அமைச்சிடமிருந்து பெறப்பட்ட ரூபா 7 மில்லியன் உயர் கல்வி அமைச்சிடமிருந்து மோட்டார் வாகனம் ஒன்றைக் கொள்வனவு செய்வதற்கென பரிந்துரைக்கப்பட்டு திறைசேரியின் அங்கீகாரம் கிடைக்கும் வரை ரூபா 7 மில்லியன் மிக ஆக்கபூர்வமான நிதி நிர்வாகமாக, நிதிய முகாமைத்துவ நிர்மாணக் கணக்கில் வைப்பிலிடுவதற்கு முகாமைத்துவக் குழு தீர்மானம் மேற்கொண்டது. 2019 டிசெம்பரில் கணக்கு ஆரம்பிக்கப்பட்டு வருடாந்தம் வரவு, செலவுத் திட்டத்தின் மூலம் பெறப்பட்ட தொகையில் 2019 இறுதியளவில் காசோலைகள் வழங்கப்படாது எஞ்சிய ரூபா 3 மில்லியனுடன் ரூபா 10 மில்லியன் வைப்பிலிடப்பட்டிருந்தது. இதில் | ஆண்டிற்கான தொகை அவ்வாண்டிலேயே செலவிடப்பட்ட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | உள்ளடங்கிய கொடுப்பனவு செய்ய வேண்டிய மூலதனச் செலவினமாகிய ரூபா 1.3 மில்லியனின் ஒரு பகுதி தற்சமயம் கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது.<br><br>நிதிய முகாமைத்துவக் கணக்கு மீதி அதேயளவு குறைந்துள்ளது. | |

**2. நிதிசார் மீளாய்வு**

**2.1 நிதிப் பெறுபேறு**

2017 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட இந் நிறுவகத்தின் மீளாய்வாண்டிற்கான ஆரம்ப நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் செயற்பாட்டுப் பெறபேறு ரூபா 446,530 பற்றாக்குறை ஆகும்.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ வினைத்திறமையின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| முகாமைத்துவச் சபையினதும் கொழும்பு பல்கலைக்கழக செனெட் சபையினதும் அங்கீகாரத்துடன் சகல பட்டபின்படிப்பு (MD) பாட விதானங்களின் பொருட்டு நியமிக்கப்பட்ட 03 Board of Study கல்விசார் சபைகளது (ஆயுர்வேத, யுனானி, சித்த) 11 பாடச் சபைகளுக்குரிய பாடப் பரிந்துரைகளாக முகாமைத்துவச் சபையினதும் கொழும்பு பல்கலைக்கழகத்தின் செனெட் சபையினதும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினதும் அங்கீகாரம் பெறப்பட வேண்டுமாயினும், 2020 ஆகஸ்ட் 21 ஆந் திகதியளவில் அவற்றுள் 2 பாடச் சபைகளுக்கு மாத்திரமே பூரண அங்கீகாரம் பெறப்பட்டிருந்தது. | இரண்டு கற்கை நெறிகளுக்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. மூன்று கற்கை நெறிகளுக்கு பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழுவினதும் சுதேச மருந்து விஞ்ஞானப் பாடத்துடன் தொடர்புடைய நிரந்தரக் குழுவின் பரிந்துரை பெறப்பட்டு முகாமைத்துவக் குழுவிற்கு அறிவிக்கப்படும் 3 கற்கை நெறிகளது விடயத்தில் 2020 ஆம் ஆண்டின்போது குறித்த அங்கீகாரத்தைப் பெரும் பொருட்டு தொடர்புடைய விண்ணப்பங்கள் பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழுவிற்கும் 4 கற்கை நெறிகளுடன் தொடர்புடைய விண்ணப்பப் படிவங்கள் செனெட் சபையில் சமர்ப்பிக்கப்படுவதற்காக கொழும்பு பல்கலைக்கழகத்தின் உள்ளக நிலைமைப் பாதுகாப்புக் கூறுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. | கற்கை நெறிகளுக்கான அங்கீகாரம் பெறப்பட வேண்டும். |

**3.2 நிதியத்தை குறைவாகப் பயன்படுத்துதல்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சுதேச மருத்துவ விஞ்ஞான பட்டபின் படிப்பு நிறுவகம் 2017 டிசெம்பர் 06 ஆந் திகதி நிறுவப்பட்டதன் பின்னர் சுதேச மருத்துவ விஞ்ஞான நிறுவகத்தால் 2016/2019 பட்டபின்படிப்பு MD (AYU) கற்கை நெறிக்கென ஆட் சேர்க்கப்பட்டு 2 ஆண்டுகால நியாயபூர்வ பயிற்சியை நிறைவு செய்திருந்த 31 மாணாக்கரை நிறுவப்பட்ட புதிய நிறுவகத்தில் உட்சேர்க்கப்படுவது தவறியிருந்தது. | நேர்முக பரீட்சைகளின் போது தெரிவு செய்யப்பட்ட 31 மாணாக்கருக்கு கற்கை நெறி ஆரம்பிக்கப்படும் எனவும் குறித்த தொகையை வழங்கி பதிவு செய்யுமாறும் கடிதம் மற்றும் இலத்திரனியல் கடித மூலம் அறிவிக்கப்பட்டது. அதற்கமைய, 24 மாணாக்கர் கற்கை நெறிக்கான பதிவை மேற்கொண்டுள்ளனர் இதற்கிடையே, 5 பேர் சுதேச மருத்துவ விஞ்ஞான நிறுவகத்தில் அவர்கள் ஆற்றிய கல்விசார் நடவடிக்கைளைக் கருத்திற் கொண்டு நேர்முகப் பரீட்சைச் சபை அவர்களை 6 மாதங்கள், 1 ஆண்டு என கல்விசார் நடவடிக்கையிலிருந்து விடுவித்துள்ளது. தற்சமயம் 19 மாணாக்கர் 5 கற்கை நெறிகளில் 2020.08.17 தொடக்கம் கல்விசார் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர். | சுதேச மருத்துவ விஞ்ஞான நிறுவகம் வழங்கும் நியாயபூர்வ மற்றும் செய்முறைப் பயிற்சிகளைப் பகுப்பாய்வு செய்து உட்சேர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.3 மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 செப்டெம்பர் 26 ஆந் திகதி முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்டு நடைமுறையில் இருந்த 7 பதவிகளில் 16 உத்தியோகத்தர்கள் இருந்தனர் அதில் 14 உத்தியோகத்தர்களது வெற்றிடங்கள் நிரப்பப்படுவது 2020 யூன் 23 வரை தவறியிருந்தது. | 2018 செப்டெம்பர் 26 ஆந் திகதியன்று குறித்த பதவிகள் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதும், முதலாவது முகாமைத்துவச் சபைக் கூட்டம் நடைபெற்றதன் பின்னர் 2019 மார்ச் தொடக்கமே இந்த நிறுவகம் முறைப்படி ஆரம்பிக்கப்பட்டிருந்தது. அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 16 ஆகும். தொழில்நுட்ப உத்தியோகத்தர் மற்றும் சாரதிகள் 05 முகாமைத்துவ உதவியாளர் பதவிகள், 02 வேலை உதவியாளர் பதவிகள் என்பன பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுச் சுற்றறிக்கை இலக்கம் 876 க்கமைய உள்ள பதவிகளாகும். | நிரந்தர அடிப்படையில் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

2019 ஆம் ஆண்டு செப்டெம்பரில் நடைபெற்ற கல்விசாரப் பதவியினரது வேலை நிறுத்தம், சனாதிபதி தெரிவு என்பன காரணமாக சகல ஆட்சேர்ப்பையும் நிறுத்துமாறு பொதுத் திறைசேரியின் செயலாளர் வெளியிட்ட 2019.11.20 ஆம் இலக்க கடிதம் காரணமாக 2019 ஆம் ஆண்டின் பொது இவ்வாட்சேர்ப்பு நடைபெறவில்லை.

முகாமைத்துவ உதவியாளர் (கணக்குப் பதிவு) பதவிக்கான ஆட்சேர்ப்பு நடவடிக்கை தற்சமயம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

## 4. கணக்களி தகைமையும் நல்லாளுகையும்

### 4.1 நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி நோக்கம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் 2030 ஆம் ஆண்டு ‘‘நிகழ்ச்சி நிரல்’’ தொடர்பாக நிறுவகம் அறிந்திருந்த போதும், நிறுவகம் தன்வசமாவதற்கு இயலுமான நிலைத்து நிறகவல்ல அபிவிருத்தி, இலக்கும் நேர்முகமும் அந்த இலக்கை அடையும் ஆற்றலையும், இலங்கை அறவிடுவதற்கான சுட்டினையும் இணங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை. | ஏற்றுக்கொள்கின்றோம்<br><br>2021 ஆம் ஆண்டிற்கான நிறுவன ரீதியான திட்டத்தைத் தயாரிக்கையில் அதனை உள்ளடக்க நடவடிக்கை எடுக்கப்படும். | இலக்கும் நோக்கங்களும் அதனை அடையும் ஆற்றலையும், இலக்கு அடையப் பெற்றதை அறவிடுவதற்கான சுட்டும் இணங்காணப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |